# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 13 வியாழக்கிழமை 30.10.2025 கதிர் 355







# அணையா தீபம் சுற்று வட்ட பகுதியில் 'செம்மணி உடனிருப்பு வேண்டுதல்'






யாழ்ப்பாணம், ஒக். 30

தேசிய கிறிஸ்தவ மன்ற ஆயர் பேரவையினரால் இனப்படுகொலைக்கு நீதி வேண்டி 'செம்மணி உடனிருப்பு வேண்டுதல்' இன்று செம்மணி அணையா தீப சுற்றுவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை முன்னெடுக்கப்பட்ட இந்தப் அடையாளப் போராட்டத்தில் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களின் மறைமாவட்ட ஆயர்கள், அருட்சகோதரர்கள் எனப் 2➤

# அரசுக்கு எதிரான பேரணியில் பங்கேற்க வேண்டும் சஜித் அணி

## மொட்டுக் கட்சி மீண்டும் அழைப்பு



கொழும்பு, ஒக். 30

வரும் நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ள அரசுக்கு எதிரான பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காவிட்டால் அது அந்தக் கட்சிக்கே அரசியல் ரீதியில் பின்னடைவாக அமையும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 4➤

# உள்ளூராட்சி தலைவர்களை சந்தித்தார் சிறீதரன் எம்.பி.



யாழ்ப்பாணம், ஒக். 30

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் யாழ்ப்பாணம் 2➤

# போதைப்பொருள் பற்றிய தகவல்களைத் தெரிவிக்க '1818' என்ற துரித தொலைபேசி இலக்கம் அறிமுகம்!



கொழும்பு, ஒக். 30

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கு 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டுடன் இணைந்த வகையில் 24 மணித்தியாலமும் செயற்படும் வகையிலான துரித தொலைபேசி இலக்கம் ஒன்றை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது.

'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டு சபையின் வேண்டுகோளுக்கு இணங்க அறிமுகப்படுத்தியுள்ள '1818' என்ற துரித தொலைபேசி இலக்கத்தின் ஊடாக 4➤

# யாழ். இந்துவில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு




யாழ்ப்பாணம், ஒக். 30

விஷ்போதைப்பொருள் அச்சுறுத்தலை முழுமையாக ஒழிப்பதற்காக அரசின் புதிய திட்டமான 'முழு நாடுமே ஒன்றாக - தேசிய செயற்பாடு' இன்று வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனை முன்னிட்டு யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையப் பொலிஸாரின் ஏற்பாட்டில் யாழ். இந்துக் கல்லூரியில் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்கள் மத்தியில் போதைப்பொருளின் தாக்கம் 4➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## உள்ளூராட்சி தலைவர்களை....

தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களை அவரது யாழ். மாவட்ட அலுவ லகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நாடாளுமன்றில்அடுத்தமாதம்நடைபெறவுள்ள2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கான பிரேரணைகள், விவாதங்களின் போது உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள், விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் தவிசாளர்களால் ஆரோக்கியமான கருத்துக்களை தெரிவிக்கப்பட்டன.

ஒவ்வொரு விடயங்களையும் தனித்தனியாக ஆராய்ந்து உரிய விடயங்களைக் கேட்டறிந்து கொண்டதுடன் எதிர்கால நடவடிக்கைக்கான விடயங்கள் தொடர்பாகவும் ஒவ்வொரு பிரதேச சபைகளின் தலைவர்களிடம் இருந்தும் விவரங்களைப் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், மிகவும் பயனுள்ளதாகவும், ஆரோக்கியமான கலந்துரையாடல்களாகவும் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இவ்வாறான சந்திப்புகள், கலந்துரையாடல்களை மேற்கொண்டு உள்ளூராட்சி மன்ற செயற்பாடுகளையும் எமது செயற்பாடுகளையும் வெற்றிகரமாக முன்னெடுக்க உதவியாக இது அமையும் என்று சிறீதரன் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

## அணையா தீபம் சுற்று .....

பல கத்தோலிக்கப் பிரமுகர்கள் பங்கெடுத்தனர்.

முன்பதாக அணையா தீபத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திய தேசிய கிறிஸ்தவ மன்ற ஆயர் பேரவையினர் அங்கிருந்து ஊர்வலமாக செம்மணி - சித்துப்பாத்தி மயானத்தின் சுற்றுவட்டம் வரை சென்று அங்கும் அஞ்சலி செலுத்தினர்.

இதன் பின் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறிய தேசிய கிறிஸ்தவ மன்ற ஆயர் பேரவையின் பொதுச்செயலாளர் சுஜிதர் சிவநாயகம்,

'செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான தகவல்கள் மீண்டும் பல தமிழ் மற்றும் சில ஆங்கில ஊடகங்களின் வழியாக வெளிக்காணரப்பட்டிருப்பதைக் குறித்து இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் அதன் ஆழ்ந்த கவனத்தை ஈர்த்துள்ளது.

இருப்பினும் இது தொடர்பான செய்திகள் குறித்து பிரதான சிங்கள ஊடகங்களின் கவனம் குறைவாக இருப்பது மிகவும் கவலைக்குரியது.

ஒரு நாடாக, இவ்விதமான வலிமிகுந்த உண்மைகளிலிருந்து நாம் பின்வாங்க முடியாது.

இதேநேரம் 2017ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில், 1980களின் இறுதியிலிருந்து இலங்கையில் 60 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் பேர் வரைகாணாமல்போயுள்ளனர்எனமதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும்,2017இல்நிறுவப்பட்டகாணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகம், பாதுகாப்புப் படையினரின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளடங்கலாக சுமார் 21 ஆயிரத்துக்கும் அதிகமான முறையீடுகளைப் பெற்றுள்ளது.

இத்தகைய புள்ளிவிவரங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் குறித்த துயரம் எமது நாட்டில் ஒவ்வொரு சமூகத்தையும் பாதித்திருக்கின்றது.

அதேவேளையில் சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப முறையாக புதைகுழிகளைத் அகழ வேண்டும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

இதேநேரம் சர்வதேச தொழில்நுட்ப ஆதரவின் அவசியத்தை சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது. மேலும் அத்தகைய உதவியை தாமதமின்றி நாடுமாறு அரசைக் கோருகின்றோம்.

அத்துடன் வளங்கள் பற்றாக்குறையால் உண்மையைச் சமரசம் செய்ய முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

செம்மணி மனித புதைகுழி தனித்துவமான வேதனையை வெளிப்படுத்துகின்றது.

மற்றையமனிதப்புதைகுழிகளில்இளையோர்மற்றும் முதியோர் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதும், இங்கு பாடசாலைப் பைகள் மற்றும் குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இவை உயிர்கள் அழிந்ததையும், மேலும் எமது நாட்டைச் சிதைத்த இன அரசியல் பரிமாணங்களையும் சாட்சியப்படுத்துகின்றன. அந்த அகழ்வுகள் மீதான மௌனம், சமூகங்களுக்கு இடையிலான அவநம்பிக்கையை மேலும் ஆழப்படுத்துவதோடு, போரின் காயங்களை நீடிக்கச் செய்யும் ஆபத்தும் இதில் உள்ளது.

செம்மணி மனித ப்புதைகுழி விசாரணை முழுமையாகவும் வெளிப்படையாகவும் நிறைவுக்குக் கொண்டுவரப்படும்பட்சத்தில், அதுதமதுகாணாமல்போன உறவுகளுக்கான பதில்களை இன்றும் தேடி அலையும் குடும்பங்களுக்கு ஓரளவு நீதியை வழங்குவதோடு மட்டுமல்லாமல், நீதி தாமதிக்கப்பட்டாலும் அது மறுக்கப்படமாட்டாது என்ற நம்பிக்கையை எம் மக்களுக்கு தரக்கூடிய ஒளிக்கீற்றாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அந்தவகையில் இந்த நாட்டின் மக்களாகவும் பாதிக்கப்பட்டவர்களோடும் அவர்களின் என்பதை குடும்பத்தினரோடும் நாங்கள் எங்களை அடையாளப்படுத்துகின்றோம் - வலியுறுத்துகின்றோம்.

நீதிஎன்பதுமனிதஉரிமைமட்டுமல்லஅதுவேதாகமக் கட்டளையாகும். இதையே இறைவாக்கினர் மீக்காநமக்கு நினைவூட்டுகிறார், 'நேர்மையைக் கடைப்பிடித்தலையும் இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்?'

எனவே, எத்தகைய வேதனையானதாயிருந்தாலும், உண்மையைத் தேடும் முயற்சியில் அரசு, சிவில் சமூகம் மற்றும் மதச் சமூகங்கள் ஒன்றிணைய வேண்டுமென நாங்கள் அழைக்கின்றோம்.' - என்றார்.

இன்றையபோராட்டத்தில்பேராயர்அதி.வண. நிஷாந்த பெர்னான்டோ (தலைவர், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்), பேராயர் அதி. வண. துஷாந்த றொட்ரிகோ (இலங்கைத் திருஅவை, கொழும்பு மறைமாவட்டம்), பேராயர். அதி. வண. வே. பத்மதயாளன் (தென்னிந்திய திருச்சபை, யாழ். மறை மாவட்டம்), அருட்பணி. கிங்சிலி வீரசிங்க (தலைவர், இலங்கை மெதடிஸ்த திருஅவை), அருட்பணி. விலி ரணசிங்க (இலங்கை பெப்டிஸ்ட் திருஅவை), அருட்பணி. சமன் பெரேரா (தலைவர், இலங்கை பிரஸ்பிட்டேரியன் திருஅவை), இணை போதகர் லக்மால் விஜயரெட்ண (தலைவர் கிறிஸ்தவ சீர்திருத்த திருஅவை), அருள்அறிவர் கிறிஸ்சோ ஹெண்டி (தலைவர், இலங்கை மக்கள் தேவ அவை), அருள்அறிவர் ரொமேஷ் புலத்சிங்ஹல (தலைவர், நாற்சதுர சுவிசேஷ திருஅவை) மற்றும் இளம் ஆடவர் கிறிஸ்தவ அமைப்பு, இளம் பெண்கள் கிறிஸ்தவ அமைப்பு, கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம், இலங்கை வேதாகம சங்கம், கிறிஸ்தவ இலக்கிய சங்கம், இலங்கை இறையியல் கல்லூரி, சத்திய வசனம், கொழும்பு இறையியல் கல்லூரி, கிறிஸ்துவுக்கான வாலிபர் அமைப்பு, இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தைச்சேர்ந்தோர் எனப்பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிரைவேட்) லிமிடெட்
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்தய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# பலநாள் மீன்பிடிப் படகு இலங்கையின் தென்கிழக்கு கடல் பகுதியில் விபத்து!

இலங்கையின் தென்கிழக்கு கடல் பகுதியில் பலநாள் மீன்பிடிப் படகு ஒன்று விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

குறித்த மீன்பிடிப் படகு தென்கிழக்கு கடல் பிரதேசத்தில், கரையிலிருந்து சுமார் 300 கடல் மைல் தொலைவில் விபத்துக்குள்ளாகி உள்ளது.

விபத்தின் போது படகில் இருந்த நான்கு மீனவர்கள், ஒரு இந்தோனேசிய மீன்பிடி படகின் மூலம் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படைக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்த மீனவர்களை அழைத்துவருவதற்காகவே தற்போது இலங்கை கடற்படைக்கு சொந்தமான விசேடகப்பல் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான குறித்த பலநாள் மீன்பிடிப் படகு கடந்த ஓகஸ்ட் 31ஆம் திகதி தேவேந்திரமுனை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற படகு என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த மீன்பிடிப் படகு கடந்த 16ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்ததாக அதன் உரிமையாளர் அறிவித்திருந்ததாக மீன்பிடித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விபத்துக்குள்ளான படகில் மொத்தம் ஆறு மீனவர்கள் இருந்ததாகவும், அவர்களில் நால்வர் இந்தோனேசியப் படகு மூலம் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

மீதமுள்ள இரு மீனவர்கள் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இதற்கிடையில், விபத்து நடந்த படகு அருகே பயணிக்கும் வர்த்தகக் கப்பல் ஒன்று இந்த மீனவர்களை ஏற்றிக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மீன்பிடித் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## கணேமுல்ல சஞ்சீவ கொலை சம்பவம்- கைதான சட்டத்தரணியின் வாக்குமூலத்தில் வெளியான தகவல்கள்!

கணேமுல்ல சஞ்சீவ கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண் சட்டத்தரணியிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் சட்டத்தரணி ஒருவர் கடவத்தை பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் (28) இரவு கைது செய்யப்பட்டார்.

கைதான வரை 72 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து மேலதிக விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதன்போது முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் பல தகவல்கள் வெளிப்பட்டுள்ளன.

கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்டதற்கு உதவியதற்காக கைது செய்யப்பட்ட சட்டத்தணி, கெஹல்பத்தர பத்மேவின் நெருங்கிய கூட்டாளியான 'தருன்' என்ற பாதாள உலகக் குற்றவாளியின் தலைமையில் செயல்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கணேமுல்ல சஞ்சீவவை கொலை செய்வதற்கு தீட்டப்பட்ட திட்டத்தில், துப்பாக்கியை மறைப்பதற்காக குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் இரண்டு பிரதிகளை இஷாரா செவ்வந்திக்கு இந்த சட்டத்தரணியே வழங்கியமை தெரியவந்துள்ளது.

அத்துடன் இந்த சந்தேக நபர் இஷாரா செவ்வந்திக்கு போலி சட்டத்தரணி அடையாள அட்டை, சட்டத்தரணிகளுக்கான வாகன நுழைவு அனுமதி மற்றும் இரண்டு சட்டத்தரணி டைகளையும் வழங்கியது தெரியவந்துள்ளது.

சந்தேகத்திற்குரிய சட்டத்தரணி கெஹல்பத்தர பத்மேவுக்கும் அவரது நெருங்கிய கூட்டாளிகளில் ஒருவரான தருனுக்கும் இடையே சிறிது காலமாக உறவுகளைப் பேணி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த உறவுகளின் அடிப்படையில் பத்மேவின் ஆலோசனையின் பேரில் இந்த சட்டத்தரணி, சஞ்சீவவின் கொலைக்கு உதவ முன்வந்துள்ளதாக விசாரணையாளர்களை மேற்கோள்காட்டி கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தருனின் அறிவுறுத்தலின் பேரில், இந்த சட்டத்தரணி இஷாரா செவ்வந்தியைச் சந்தித்து சஞ்சீவவின் கொலைக்குத் தேவையான வசதிகளை வழங்கியுள்ளார்.

அதன்படி சஞ்சீவவின் கொலைக்கான துப்பாக்கியை நீதிமன்றத்திற்கு ரகசியமாக எடுத்துச் செல்ல குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் இரண்டு பிரதிகள் வழங்கப்பட்டன. கொலையாளி இந்த பிரதிகளில் ஒன்றின் உள் பக்கங்களை வெட்டி, சஞ்சீவவைக் கொலை செய்வதற்காக துப்பாக்கியை அதில் மறைத்து வைத்திருந்தார்.

மேலும் இஷாரா செவ்வந்தி நீதிமன்றத்திற்குள் நுழைவதற்கு சட்டத்தரணிகள் சங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை போலியாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், நீதிமன்ற வளாகத்திற்குள் வாகனம் நுழைய சட்டத்தரணிகளுக்கு வழங்கப்படும் வாகன நுழைவு அனுமதிச் சீட்டையும் இந்த சட்டத்தரணி செவ்வந்திக்கு வழங்கியது தெரியவந்துள்ளது.

கொலையைச் செய்த கொமாண்டோ சாலிந்து சட்டத்தரணி உடையை அணிய தேவையான இரண்டு டைகளையும் செவ்வந்திக்கு இந்த பெண் சட்டத்தரணி கொடுத்ததாக புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கணேமுல்ல சஞ்சீவ கொலை சம்பவம் தொடர்பில் உடந்தையாக செயல்பட்ட இஷாரா செவ்வந்தியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, இந்த சட்டத்தரணி குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

## அரச வைத்திய அதிகாரிகள் தொடர்பில் தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்ட தகவல்!




சேவையை விட்டு விலகிய அரச வைத்திய அதிகாரிகள் தொடர்பில் தேசிய கணக்காய்வு அலுவலகம் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி சேவையை விட்டு விலகிய வைத்திய அதிகாரிகளிடமிருந்து 2024ஆம் ஆண்டு ஒக்டோபர் 31ஆம் திகதிக்கு அரசினால் அறவிடப்பட வேண்டிய பிணை முறி, தண்டப் பணம் மற்றும் கடன் முன்பண நிலுவைகள் ஆகியவற்றின் மொத்தத் தொகை ரூபாய் 1,277 மில்லியன் ஆகும் என்று அந்தக் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

சேவையை விட்டு விலகிய வைத்திய அதிகாரிகளிடமிருந்து அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய நிலுவைகள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி பெற்ற விசேட வைத்திய அதிகாரிகளை நியமிப்பது தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை ஊடாக இந்த விடயம் தெரியவந்துள்ளது.

தற்போது முதுகலை பட்டப்படிப்புப் பயிற்சிக்காகவும், வெளிநாடுகளில் வேலை செய்வதற்காகவும், மற்றும் ஏனைய காரணங்களுக்காகவும் வெளிநாடு செல்லும் வைத்திய அதிகாரிகள் சேவையை விட்டு விலகுவது மற்றும் சேவையை கைவிடுவது குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காட்டுவதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இந்த அதிகாரிகள் பிணை முறி மற்றும் தண்டப் பணத்தை செலுத்தாமல் இருக்கும் போக்கு அதிகரித்துள்ளதாகவும், அவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கைகளில் பல பலவீனங்கள் இருப்பதாகவும் கணக்காய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் 2015ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு இறுதி வரை மொத்தம் 705 வைத்தியர்கள் ஒப்பந்தத்தை மீறியுள்ளதும் இந்த கணக்காய்வின்போது தெரிய வந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## பனம்பழத்தில் இருந்து புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட வைன்- ஆளுனரிடையே கலந்துரையாடல்!

பனம்பழத்தில் இருந்து புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட வைன் (நிறுாஹிசி) தொடர்பாக வடமாகாண ஆளுனரிடையே கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், வீபுபுவீபுறீ நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர் விக்டர் ஆகியோருக்கும் இடையில் நேற்றையதினம் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலின் போது பனம்பழத்தில் இருந்து புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட வைன் (நிறுாஹிசி) தொடர்பாகவும், இதன் ஊடாக ஏற்றுமதி பொருளாதாரத்தில் எவ்வாறான மாற்றத்தை உருவாக்கலாம் என்பது தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டது.

பனம்பழத்தில் இருந்து வைன் செய்வதற்கு தாராளமாக மூலப்பொருளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளமை மற்றும் உற்பத்திச் செலவு மிகக்குறைவாக உள்ளமை ஆகியன காரணமாக உலக சந்தையில் இதற்கான கேள்வி அதிகம் உள்ளமை தொடர்பில் கண்டுபிடிப்பாளர் விக்டர், ஆளுநருக்கு தெளிவுபடுத்தினார்.

அத்துடன் இதன் மூலம் ஏற்றுமதி பொருளாதாரத்தில் எவ்வாறான மாற்றத்தை உருவாக்கலாம் என்பது தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

பல மில்லியன் ரூபாக்களை ஈட்டக்கூடிய வாய்ப்புக்களிருந்தும் அதனை உரியமுறையில் பயன்படுத்த தவறியுள்ளமையையும் சுட்டிக்காட்டினார்.

தமது தொழிற்முயற்சியின் விரிவாக்கம் மற்றும் எதிர்காலத்திட்டங்களின் ஊடாக உருவாக்கப்படவுள்ள தொழில்வாய்ப்புக்கள் தொடர்பிலும் சுற்றுச்சூழல் நேயமான இந்த உற்பத்திச் செயற்பாட்டின் அவசியம் தொடர்பாகவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது.



இவ்வாறான முயற்சிகள் காலத்தின் தேவையறிந்த செயற்பாடு என வரவேற்ற ஆளுநர், மாகாண சபையூடான ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். இந்துவில் போதைக்கு.....

எவ்வாறு சமூக மத்தியில் ஏற்படுத்தப்பட்டுகின்றது என்பது தொடர்பில் விழிப்புணர்வுக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன் மாணவர்கள் மத்தியில் பாடசாலை அதிபர், பொலிஸ் உயர் அதிகாரிகள் கருத்துரைகளை வழங்கினார்கள்.

அத்துடன், விழிப்புணர்வு தெரு நாடக ஆற்றுகையும் நடைபெற்றது

## போதைப்பொருள்.....

பொதுமக்களுக்கு நாடு பூராகவும் இயங்கும் போதைப்பொருள் வர்த்தகம், விநியோகம் அல்லது அதனுடன் தொடர்புடைய சந்தேகத்திற்கு இடமான செயற்பாடுகள் குறித்து சரியான தகவல்களை வழங்க முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## அரசுக்கு.....

கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான சஞ்சீவ எதிரிமான்ன இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசின் ஊழல், தவறான நிர்வாகம் மற்றும் ஜனநாயக விரோத நடைமுறைகளுக்கு எதிராக எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் கூட்டம் மற்றும் எதிர்ப்புப் பேரணியை நடத்துவதற்கு முக்கியமான சில எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா மகாஜன கட்சி என்பன இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. எனினும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்தப் பேரணியில் பங்கேற்காதிருக்கத் தீர்மானித்தள்ளது.

இந்நிலையிலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகப் பேச்சாளர் சஞ்சீவ எதிரிமான்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'கூட்டத்தில் பங்கேற்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் முடிவெடுக்கும் உரிமை ஐக்கிய மக்கள் சக்திக்கு உள்ளது. அந்த உரிமையை நாம் மதிக்கின்றோம். எனினும், பிரதான எதிர்க்கட்சிக்குரிய பொறுப்பை அந்தக் கட்சி நிறைவேற்றும் என நம்புகின்றோம்.

நுகேகொடை கூட்டத்தில் அக்கட்சி பங்கேற்கும் என நம்புகின்றோம். இன்னும் காலம் உள்ளது. சில வேளை பங்கேற்காவிட்டால் அது அந்தக் கட்சிக்கே பாதகமாக




# 2026இல் அறிமுகமாகும் புதிய பாடத்திட்டத்தின்படி போக்குவரத்து சேவையில் மாற்றம்!

2026இல் அறிமுகமாகும் புதிய பாடத்திட்டத்தின்படி நீடிக்கப்பட்ட பாடவேளைகளைக் கருத்திற்கொண்டு, புதிய போக்குவரத்து சேவையை அறிமுகப்படுத்துவதில் கல்வியமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

2026இல் அறிமுகமாகும் புதிய பாடத்திட்டத்தின்படி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தரம் 05 - தரம் 13 வரையான அனைத்து வகுப்புகளுக்கான கல்வி செயல்பாட்டின் நேரம் பிற்பகல் 2 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என கல்வி அமைச்சு முன்னதாக அறிவித்திருந்தது.

இதற்கமைய மாணவர்களுக்கான போக்குவரத்து சேவை தொடர்பாக, போக்குவரத்து அமைச்சுடன் ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டுள்ளதாக கல்வி பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி தற்போது இயக்கப்படும் சிசு செரிய உட்பட அனைத்து பேருந்து சேவைகளும், பாடசாலைகளின் புதிய நேர அட்டவணையின்படி இயக்கப்படுமென அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் ஹெரோயினுடன் நான்கு இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று புதன்கிழமை 4 இளைஞர்கள் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்து 7 போதை மாத்திரைகள் மற்றும் 90 மில்லிகிராம் ஹெரோயின் என்பன மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நால்வரிடமும் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ் மக்கள் கூட்டணியினரின் தலைமைச் செயலகம் திறப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 30

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைமைச் செயலகம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் இலக்கம் 58, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் குறித்த அலுவலகம் அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அந்தக் கட்சியின் உப செயலாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டு முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் கூட்டணி எனும் அரசியல் கட்சி, தமிழர் தாயகத்தில் அரசியல் சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வாடகை வாகனப் பயணச் சேவைகளை ஒழுங்குமுறைப்படுத்த தீர்மானம்

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு!

முச்சக்கர வண்டிகள், பாடசாலைப் போக்குவரத்து சேவைகள் உட்பட ஏனைய வாடகை வாகனப் பயணச் சேவைகளை ஒழுங்குமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர், பொறியியலாளர் பீ. ஏ. சந்திரபால தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முச்சக்கர வண்டிகள், பாடசாலை மற்றும் அலுவலகப் போக்குவரத்துச் சேவைகள், வாடகை வாகனங்கள் மற்றும் விசேட சுற்றுலாச் சேவைகள் ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்கத்துடன் இந்தத் திட்டத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

பொதுவாக, இந்தப் பிரிவில் ஈடுபட்டுள்ள அதிக எண்ணிக்கையிலானவர்களின் பாதுகாப்புக்காக, ஒரு அரச சார்பற்ற போக்குவரத்துத் தொழிலாளர் சபையை ஒரு நிறுவனமாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உறுதிசெய்வதற்கான ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன- என பீ. ஏ. சந்திரபால தெரிவித்துள்ளார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கலாநிதி நிலான் மிருண்டா இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்:

முச்சக்கர வண்டிகள், பாடசாலை மற்றும் அலுவலகப் போக்குவரத்துச் சேவைகள், வாடகை வாகனங்கள் மற்றும் விசேட சுற்றுலாச் சேவைகள் ஆகிய பிரிவுகளில் தரவுகள் சேகரிக்கப்படும்.

இதற்காக அரச நிறுவனங்கள் மற்றும் வாகனத் தரிப்பிடங்களில் ஸ்டிக்கர் ஒன்றை நாங்கள் காட்சிப்படுத்துவோம். அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி தகவல்களைச் சமர்ப்பிக்கலாம். இந்த போக்குவரத்துச் சேவைகள் தொடர்பான தரவுகளைச் சேகரிக்கும் நடவடிக்கை நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும்- என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் புதிய மேலதிக ஆணையாளர் நாயகம் நியமனம்!




மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் புதிய மேலதிக ஆணையாளர் நாயகமாக கே.பி.என் தாரக நிரோஷன் தேவப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, இன்று (30) அவர் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் மேலதிக ஆணையாளர் நாயகம் பதவி புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட இந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட முதலாவது மேலதிக ஆணையாளர் நாயகமாக தாரக நிரோஷன் தேவப்பிரிய வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான தாரக நிரோஷன் தேவப்பிரிய, 2003 நிர்வாக சேவை குழுவின் உறுப்பினர் ஆவார்.

ஆரச்சிகட்டுவ பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக அரச சேவையில் இணைந்த தாரக நிரோஷன், தனது அரச சேவைக் காலத்தில் நிதி அமைச்சு, சுங்கத் திணைக்களம் போன்ற பல அரச நிறுவனங்களில் பணியாற்றியிருந்தார்.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் மேலதிக ஆணையாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் கல்வி அமைச்சில் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல – 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.10.2025 இல் வெளியிடப்பெற்றது